# 56. குமாரானந்தலகரி.



*அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.*

*பண் - மேகராகக்குறிஞ்சி.*

**க**ங்கையினீ வந்ததனா லன்றோவக் கங்கைதனிற் படிவார்க் கெல்லாம்
பொங்குகறை போக்கிநறும் புனிதமளித் திடுமரிய புண்ணி யத்தை
மங்குதலில் லாமலடைந் தாளெனவே லையவுனை மருவு கின்ற
புங்கவர்க ளறிகின்றா ரெனினினதொள் ளுருமகிமை புகல்வோர் யாரே. 1

**ஆ**தியறு பேரொளிநீ கடவுளுக்கு மகனெ னுஞ்சொ லணைந்த தாலே
சாதிபல வாயிருக்கும் பெண்ணுயிர்க ளெல்லாமுந் தவத்தி னாகு
நீதிவழி மலடுதவிர்ந் துய்ந்தனவே யெனவறிவார் நிபுண ரெல்லாம்
வீதிதொறு நினைநாடி நிற்குமெனை யாள்குமர வேளே மன்னோ. 2

**த**னதடியி னூபுரமா மணியிரவி களிலொன்றின் சன்னி தானம்
எனுமொளிமுன் னுலகம்விளக் கிடுமிரவி முதலியன விலகா வென்றே
அனகவொளி யுருமுருகன் பகிர்முகம்விட் டகமுகம தானா னென்பார்
நினதடியைப் புகழ்புனிதர் குமரகுரு பரனேயென் னினைப்பு ளானே. 3

**உ**ன்றனடி நூபுரத்தி னொலிதானே பெரியவர்கட் குரிய பேராய்
நின்றிடுநின் னடிசுமந்த புள்ளுறையு மிடமதுவே நெடிய சொர்க்கம்
என்றறியு மறிவாள ருன்றனிரு தாண்மகிமை யினைத்தென் றோது
கின்றவலி யுள்ளாரு முளரோவென் பார்கருணை கெழுவே லோயே. 4

**எ**ண்ணரிய வுயிர்களெலா நீயிருக்கு மூர்த்தமென வியம்பு நூலோர்
தண்ணளிசால் சாமியெனும் பெயருனக்குஞ் சொலியிந்தத் தரணி யோர்க்கும்
விண்ணவர்க்கும் விளம்பிடுதல் சம்புவெனு மிறைமொழியை நரிக்கு மீப்போம்
வண்ணவிப நாவலுக்கும் வழுத்துதலை யொக்குமென்பார் வடிவே லோயே. 5

**மு**ம்மூர்த்தி களுமுன்ற னாணைவழி முத்தொழிலும் புரிகின் றாரென்
றெம்மூர்த்தி களுக்குமுதன் மூர்த்தியா யுளபரம னியம்பி னானென்
றம்மூர்த்தி சரிதநவில் காந்தமறை தருமாயி னமர ரெல்லாம்
நம்மூர்த்தி குகனெனவுன் றாள்பணியா தென்புரிவார் நறிய வேலோய். 6

**பொ**ருவிலிறை யாமுனது பெரியவிபூ தியிற்சிறிதே புகலவொண்ணாச்
சருவவுல கயிச்சுரிய மெனப்பரம னுரைத்தவுரை தனைமா காந்தச்
சுருதிவிளக் கிடுமாயி னினது திருத் தகைமையணுத் துணையுங் கூறு
குரு வெவர்கொன் மூவுலகத் தினுமுலக குருவாய குமர வேளே. 7

**த**வமுடைய தேவர்களைத் தன்னுருவா வுடையசிவன் றானே யுன்னைச்
சிவமெனவுண் மதித்துரிய சீடனென வாயினன்முன் னெனினே னோருள்
எவருனடி வணங்காத பெயரெவரும் வணங்கினவ ரெனவே யாவார்
தவளமலர் முடிமுருகா நினதடிமண் ணவர்பணியத் தடையொன் றுண்டோ. 8

**சே**யெனச்சொன் மழவுருவைப் பரமேச வடிவெனநீ செய்த காலை
மாயனெட்டு விழியன்முதல் விண்ணவரெல் லாருமந்த வடிவு மின்னின்
ஆயிரத்தி னோரமிச மட்டுமறிந் தனரல்லா லதிக மின்றே
பேயகத்த னாயவெனைப் பேணுகுக வதுவென்னாற் பேசற் பாற்றோ. 9

**ச**மாதான முடனுன்னை நினைத்தாலென் னுள்ளமெலாந் தண்ணென் றாகும்
உமாதேவி சுதனாமுன் னடிபாடி வணங்கிலெனை துணர்வுள் ளோங்கிச்
சமாராத னைக்குரிய வருணகிரி தண்ணளியுந் தானே யேயும்
குமாராய நமவென்னு மாறெழுத்து முச்சரிப்பார் குருவே யன்றே. 10

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 11ஆம் தேதி புதவாரம்.